**O.S. No.52/2024**

**06.03.2026**

**பி.சா. 1**

**திரு செந்தில்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

தாவா வழக்கை தாக்கல் செய்தது என் தாயார். என் தாயாருக்கு நானும் என் அண்ணன் கணேசனும் 2 மகன்கள் ஆவோம். கணேசன் 2016 ம் ஆண்டு கடைசியில் துபாய் சென்றுவிட்டார். வழக்கை என் தாயார் தாக்கல் செய்ததற்கான காரணம் என்னவென்று எனக்கு தெரியும். 2017 ம் ஆண்டு நான் காஞ்சிபுரத்தில் வேலை பார்த்தேன். எனக்கு ஓசூர் ICICI Bank ல் Salary Account உள்ளது என்றால் சரி. மேற்படி வங்கியின் Account No.15560150333 என்றால் சரி. அதற்கான விபர பட்டியல் என்னிடம் உள்ளது. 28.04.2017 ல் என்னுடைய சகோதரர் துபாயிலிருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கு ரூ.22,264.81 அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 31.05.2017 ல் ரூ.60,910.68 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 02.07.2017 ல் ரூ.50,000/- என் வங்கி கணக்கில் என் சகோதரர்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.06 16:35:24 +0530

அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 04.10.2017 ல் ரூ.90,015.88 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 01.11.2017 ல் ரூ.60,000/- என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 13.12.2017 ல் ரூ.90,000/- என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 08.02.2018 ல் ரூ.52,040.46 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 04.03.2018 ல் ரூ.53,918.27 என் வங்கி கணகில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 04.04.2018 ல் ரூ.60,529.10 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 06.05.2018 ல் ரூ.51,143.38 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 29.07.2018 ல் ரூ.71,226.24 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 28.08.2018 ல் ரூ.58,027.04 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 02.10.2018 ல் ரூ.63,018.57 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 29.10.2018 ல் ரூ.40,259.22 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 11.01.2019 ல் ரூ.10,045.92 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 05.01.2020 ல் ரூ.1,15,026.31 என் வங்கி கணக்கில் என் சகோதரர்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:35:30 +0530

அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 05.04.2020 ல் ரூ.80,209.40 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. 11.06.2020 ல் ரூ.95,010.20 என் வங்கி கணக்கில் என் சகோதரர் அனுப்பியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. இவை அனைத்தும் என்னுடைய ICICI வங்கி கணக்கில் பணம் வந்துள்ளது என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ரசீதுகளில் பயனாளி என் பெயரில் மேலே குறிப்பிட்ட கணக்கில் கணேசன் துபாயிலிருந்து தொகை அனுப்பியதாக உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் ICICI வங்கியில் Statement of Account பெற்று சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். அவ்வாறு தாக்கல் செய்தால் மேற்கண்டவாறு இன்ன இன்ன தேதிகளில் இன்ன இன்ன தொகை பெறப்பட்டது என்ற விபரம் முழுமையாக தெரியும் என்றால் சரி. ICICI வங்கி சாந்தி நகரில் உள்ளது என்றால் சரி. என் சகோதரர் கணேசன் அவ்வாறு வெளிநாட்டிலிருந்து அனுப்பிய பணத்தை கொண்டுதான் தாவா இடத்தில் RCC கட்டிடம் கட்டப்பட்டது என்றால் தவறு. மேலேகண்ட வெளிநாட்டு பணம் என் கணக்கிற்கு வந்த விபரம் பற்றி என்னால் சொல்ல இயலாது. 2011ம் ஆண்டு நான் Ashok Leyland ல் பணிக்கு சேர்ந்தேனா என்றால் இல்லை, 2023 ல்தான் Ashok Leyland ல் பணிக்கு சேர்ந்தேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை படித்துபார்த்துதான் நான் கையெழுத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:35:37 +0530

செய்தேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தின் 2 வது பத்தியில் 2011 ம் ஆண்டு Ashok Leyland ல் பணிக்கு சேர்ந்ததாக கூறியிருந்தால் அது தவறு. என்னுடைய சகோதரர் 2016 ம் ஆண்டு வெளிநாடு சென்றார். என் சகோதரரை வெளிநாடு அனுப்புவதற்காக 2016 ம் ஆண்டு செலவு செய்ததற்கான தொகை சுமார் ரூ.7,00,000/- அல்லது ரூ.8,00,000/- இருக்கலாம். கையில்தான் மேற்படி தொகையை வைத்திருந்தேன். அதற்கான வங்கி கணக்கு எதையும் காட்ட இ யலாது. 2015-2016 ல் என்னுடைய வருட வருமானம் ரூ.7,00,000/- அல்லது ரூ.8,00,000/- இருக்கலாம். அதற்கான சம்பள பட்டியலை தாக்கல் செய்யலாம் என்றால் சரி. 2016 வாக்கில் ஆண்டொன்றுக்கு ரூ.1,50,000/-க்கு உட்பட்டுதான் என்னுடைய மாதாந்திர வருமானம் என்றால் தவறு. நான் வருமான வரி கட்டியதற்கான ஆதாரத்தை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரி. தாவா இடத்தில் உள்ள RCC கட்டிடம் 2017 ம் ஆண்டு ஆரம்பித்து 2018 ல் முடிக்கப்பட்டது. அதற்கான வரைபடம் மற்றும் அனுமதி என் தாயாரின் பெயரில் உள்ளன. எவ்வளவு Licence Fee கட்டப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனவே, 2018 க்கு முன்பாக தாவா இடத்தில் RCC கட்டிடம் இல்லையென்றால் சரி. தாவா சொத்தில் வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 மூலம் என் தாயார் பெயருக்கு காலி மனையாக இருந்த நிலையில் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரி. வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம் 2023 ல் என்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:35:44 +0530

தாயாரால் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரி. அசல் என்வசம் உள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.5 ல் கண்ட விபரங்கள் யாவும் உண்மையானவை, தோராயமாக ஏற்படுத்திக் கொண்டதல்ல. வா.சா.ஆ.5 எழுதும் காலத்தில் தாவா கட்டிடடத்திற்கு 5 வயதுதான் என்றால் சரி. வா.சா.ஆ.5 ல் கட்டிடத்தின் வயது 10 என போடப்பட்டுள்ளது என்ன காரணத்திற்காக என்று என்னால் சொல்ல இயலாது. என் தாயாரை அழைத்துபோய் ஆவணத்தை பற்றி எதுவும் தெரிவிக்காமல் கபடமாக நான் அவசரத்தில் வா.சா.ஆ.5 எழுதி வாங்கியதால் அதில் தவறான விபரங்கள் கண்டுள்ளது என்றால் தவறு. என் சொந்த உபயோகத்திற்கு பணம் தேவைப்பட்டதால் என் தாயாரை அழைத்துபோய் அவசரமாக வா.சா.ஆ.5 ஏற்படுத்தப்பட்டது என்றால் தவறு. செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்ய பதிவு கட்டணம் எவ்வளவு கட்டினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. ஆனால், அதற்கான ரசீது என்னிடம் உள்ளது. என்றைய தேதியில் எத்தனை மணிக்கு பணம் செலுத்தப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.5 ல் யார் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் என்னுடைய பள்ளி காலத்து நண்பர்களான மணிகண்டன் மற்றும் பாரி ஆவார்கள். மேற்படி நண்பர்கள் எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர்கள் என்றால் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் என் வீட்டிற்கு வருவார்கள். மேற்படி இருவரையும் என்னால் விசாரிக்க இயலாது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:35:49 +0530

அவர்களை விசாரித்தால் வா.சா.ஆ.5 பொய்யாக தயார் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்பதால் நான் விசாரிக்க மறுக்கிறேன் என்றால் தவறு. சாட்சிகள் என் அண்ணனின் கட்டுப்பாட்டில் உள்ளார்கள். வா.சா.ஆ.5 சாட்சிகள் இருவரும் சமூகம் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவர்கள் இருவரையும் விசாரிக்காமல் இருக்க என் அண்ணன் கட்டுப்பாட்டில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. என் அண்ணன் வெளிநாட்டில் இருப்பதால் அவர் சாட்சிகளை கட்டுப்படுத்த கூடிய நிலையில் இல்லையென்று சொன்னால் தவறு. என் சகோதரர் கணேசன் வெளிநாட்டிலிருந்து எனக்கு எந்த தொகையும் அனுப்பியதில்லை. என் சகோதரரின் பணத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வழக்கிற்காக தற்போது பணம் அனுப்பியதில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வெளிநாட்டிலிருந்து என் சகோதரர் கணேசன் அனுப்பிய பணத்தை கொண்டுதான் வீடு கட்டப்பட்டது என்றால் தவறு. தாவா சொத்தில் உள்ள வீடு என் தாயாருக்குதான் சொந்தம் என்பதை பொறுத்து எனக்கு எந்த மாறுபட்ட கருத்துமில்லை என்றால் சரி. தாவா வீடு எனக்கு சொந்தம் என எதிர்கட்டு கோரிக்கை மனு கொடுத்தேன் என்றால் சரி. அந்த கோரிக்கையின்படி நீதிமன்ற கட்டணம் செலுத்த சொல்லி உத்தரவானது. ஆனால், அந்த கட்டணத்தை கட்டுவதற்கு நான் தயாராக

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:35:54 +0530

இல்லையென்பதால் என் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதற்கான எதிர்கட்டு கோரிக்கை மனுவுடன் ஏற்பட்ட உத்தரவு வா.சா.ஆ.10 ஆகும். நான் நீதிமன்ற கட்டணம் கட்ட தயாராக இல்லை. எனவே, தாவா சொத்து எனக்கு சொந்தமில்லை என தடைபடுத்தப்பட்டுள்ளேன் என்றால் தவறு. எந்த தேதியில் தாவா சொத்தை என் தாயார் எனக்கு கொடுப்பதாக குடும்பத்தில் பேச்சு ஏற்பட்டது என்றால் 2023 ம் ஆண்டு நவம்பரில். அவ்வாறு நாங்கள் குடும்பத்தில் கலந்து பேசி ஏற்படுத்திக்கொண்ட பேச்சு பற்றி வா.சா.ஆ.5 ல் காணப்படவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.5 க்கான முத்திரை தாளை நான்தான் வாங்கினேன். அது ஒருநாள் முன்பாக வாங்கப்பட்டது. எந்த தேதியில் வா.சா.ஆ.5 எழுதப்பட்டது என்றோ பதிவு செய்யப்பட்டது என்றோ என்னால் சொல்ல இயலாது. வா.சா.ஆ.5 பதிவு செய்வதற்கு 2 / 3 நாட்களுக்கு முன்பாக எழுதப்பட்டது. அன்றே எழுதி அன்றே பதிவு செய்யப்பட்டதா என்று எனக்கு ஞாபகமில்லை. ஆவணத்தை கபடமாக தயார் செய்து கொண்டதால் எனக்கு தோன்றியவாறு அது ஏற்பட்ட விதத்தை மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் தவறு. 28.06.2017 ல் என் தாயார் பேரளம் பாரத மாநில வங்கி கிளையில் அடமான கடனுக்கு தாவா சொத்தில் ஆவண வைப்பீடு எழுதி கொடுத்தார் என்றால் சரி. அதற்கான ஆவணம்தான் வா.சா.ஆ.4. வா.சா.ஆ.4 ல் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. அந்த கடனை கணேசன்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:36:01 +0530

அனுப்பிய பணம் மூலமாக தீர்க்கப்பட்டது என்றால் தவறு, நான்தான் கட்டினேன். மேற்படி விபரத்தை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. ஏற்கனவே வங்கியில் என் தாயார் சொத்தை அடமானமாக வைத்து கடன் பெற்ற பழக்கம் இருந்ததால் நான் அழைத்தபோது என்னை நம்பி மீண்டும் அடமான கடன் பெறுவதற்காக வந்த என் தாயாரை நான் அழைத்து சென்று மோசடியாக வா.சா.ஆ.5 ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் தவறு. பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றால் சரி. நான் தற்சமயம் திருச்சியில் பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய பொருட்களை தாவா கட்டிடத்தின் கீழ் தளத்தில் வைத்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்தை என் தாயாரிடமிருந்து கிரயம் பெற்றுக்கொள்ள நான் தீர்மானித்து பின்னர் முத்திரை தாள் மற்றும் கட்டணம் ஏராளமாக வரும் என எழுத்தர் சொன்னதன் பேரில் வா.சா.ஆ.5 எழுதப்பட்டது என்றால் சரி. முன்பே அவரிடமிருந்து கிரயம் பெற்றுக் கொள்வதாக தீர்மானித்து பின்னர் அதை மாற்றி செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதப்பட்டது என்றால் சரி. இப்பவும் தாவா இடத்தில் உள்ள RCC கட்டிடம் கதவு எண் 146 கொண்டது எனக்கு சொந்தமென்பதுதான் என்னுடைய கட்சியாகும். வா.சா.ஆ.5 க்கு முன்பு கீழ் மனையும் கட்டிடமும் என் தாயாருக்கு உரிமையானது என்றால் சரி. கட்டிடம்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.06 16:36:07 +0530

செட்டில்மெண்டுக்கு முன்பாக யாருக்கு சொந்தம் என்றால் நான் கட்டியிருந்த போதிலும் என் தாயாருக்குதான் சொந்தம். எதிர் வழக்குரை பாரா 3ல் இறுதி வார்த்தைகளில் சொல்லியிருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் தவறு. வா.சா.ஆ.5 வயதான தாயாரை அதிகம் வெளி பழக்கம் இல்லாதவரை அழைத்து சென்று ஏமாற்றி கபடமாக எழுதி வாங்கப்பட்டது என்றால் தவறு. என் தாயாரின் எண்ணத்திற்கு விரோதமாக எழுதி வாங்கப்பட்டது என்றால் தவறு. வா.சா.ஆ.5 சட்டப்படி செல்லத் தக்கதல்ல என்றால் தவறு. பட்டாவை அவசரமாக என் பெயரில் மாற்றியுள்ளேன் என்றால் தவறு. மீண்டும் வாதி உரிய அதிகாரியிடம் மனு கொடுத்து அவர் பெயரில் தாவா சொத்துக்கான பட்டாவை பெற்றார் என்றால் தவறு. வெளிநாட்டிலிருந்து என் சகோதரர் கணேசன் அனுப்பிய பணத்திலிருந்து 2017ம் ஆண்டு வங்கி கடன் ரூ.13,00,000/-யை நாங்கள் செலுத்தினோம் என்றால் தவறு. அதற்கான ஆவணங்கள் அனைத்தும் என்னிடமே உள்ளது எனவும் வாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு உண்மைக்கு மாறாக நான் கடனை அடைத்ததாகவும் வீடு கட்ட செலவு செய்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தனிப்பட்ட முறையில் என் தேவைக்காக நான் நகை அடமான கடனும் வேறு கடன்களும் வாங்கியதை இவ்வழக்கில் உள்ள பிரச்சனையுடன் தொடர்புபடுத்தியுள்ளேன் என்றால் தவறு. எனக்கு ஆண்டிபந்தலில் ஒரு மனை உள்ளது

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.06 16:36:13 +0530

எனவும் என் அண்ணன் அனுப்பிய பணத்தில் அந்த மனை வாங்கப்பட்டது எனவும் சொன்னால் தவறு. தாவாவில் என் தாயாரான வாதி கோரியுள்ளவாறு அனைத்து பரிகாரங்களையும் பெற உரிமையுடையவர் என்றால் தவறு. எனக்கு சொந்தமான பொருட்கள் வாதியின் வீட்டில் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.06 16:36:18 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.